CNR NO.TNTI210003132021

**பல்லடம் சார்பு நீதிமன்றம்**

முன்னிலை திரு.எஸ்.சந்தானகிருஷ்ணசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, பல்லடம்

**2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாள் திங்கட்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2053 சுபகிருது வருடம் புரட்டாசித் திங்கள் 23–ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.148/2021**

திரு.துரைசாமி ...வாதி

/எதிர்/

1. திரு.தேவகுமார்
2. திரு.ரத்தினசாமி
3. திருமதி.நிர்மலா .... பிரதிவாதிகள்

17.12.2021–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கானது கடந்த 30.09.2022–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ் அவர்களும், பிரதிவாதிகள் வழக்கறிஞர் திரு.P.சக்திவேல் அவர்கள் மூலம் ஆஜராகிப் பின்னிட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டு வாதி தரப்பில் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்குக் கோப்புகளைப் பரிசீலித்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீ ர் ப் பு ரை**

தாவா சொத்தினை நலந்திகடு கண்டு 4 சம பாகங்களாப் பிரிவினை செய்து அதில் வாதிக்கு ஒரு பாகத்தை ஒதுக்கித் தனி சுவாதீனம் கொடுக்கும்படிக்கும், செலவு தொகைக்காகவும் வாதிகள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

**01. வழக்கின் சுருக்கம்**

ஒரு சின்னசாமிக் கவுண்டருக்கு சீதையம்மாள் மற்றும் பாப்பாத்தி (எ) முத்துலட்சுமி என இரண்டு மனைவிகள். பிரதிவாதிகள் சின்னசாமிக் கவுண்டரின் முதல் மனைவியின் மக்கள், வாதி இரண்டாவது மனைவியின் மகனாவார். 17.05.1989 தேதியிட்ட 979/1989 எண் கொண்ட பத்திரப்படி

தாவா சொத்துக்கள் சின்னசாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். பாகப்பிரிவினையில் சின்னசாமிக் கவுண்டருக்கு A அட்டவணைச் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. சின்னசாமிக் கவுண்டரின் முதல் மனைவி சீதையம்மாளும், தாயாரும் நீண்ட காலத்திற்கு முன்னதாகவே இறந்து விட்டனர். சின்னசாமிக் கவுண்டர் கடந்த 13.06.2005 அன்று வாதி, பிரதிவாதிகளைத் தனது வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார்.

**1.2.** சின்னசாமிக் கவுண்டரின் இறப்பிற்குப் பின்னிட்டு வாதி, பிரதிவாதிகள் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளனர். தற்போது பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்களை 3 ஆம் நபர்களுக்கு வில்லங்கப்படுத்த முயற்சிக்கின்றனர். வாதிக்குத் தாவா சொத்தில் 1/4 பாக பாத்தியம் உள்ளது. பிரதிவாதிகளின் வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு விளைவித்து வருகின்றனர். அமைதியான முறையில் பாகப்பிரிவினை செய்து கொள்ளப் பிரதிவாதிகளை அணுகியும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. கடந்த 02,12,2021 அன்று பிரதிவாதிகள் வேண்டுமென்றே வாதிக்கு இடையூறு ஏற்படுத்தினர். நலம்விரும்பிகளின் உதவியுடன் மேற்படி செயலைத் தடுத்து விட்டார். எனவே வேறு வழியின்றி பாகப்பிரிவினைக்காக இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

**02. எதிர் வழக்குரையின் சுருக்கம் –**

பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்.

03. **தீர்வுகாண வேண்டிய பிரச்சனை**

இந்த வழக்குப் பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதா?

**04. தீர்வு முடிவு**

வாதி தரப்பில் வாதி வா.சா–1 ஆகவும், ஒரு லிங்கசாமி என்பவர் வா.சா–2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, சின்னசாமிக் கவுண்டர் பெயரிலுள்ள பாகப் பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், சின்னசாமிக் கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராகக் கருதப்படுகின்றனர்.

**5.2.** ஒரு சின்னசாமிக் கவுண்டருக்கு சீதையம்மாள் மற்றும் பாப்பாத்தி (எ) முத்துலட்சுமி என்ற இரண்டு மனைவிகள் என்றும், பிரதிவாதிகள் சின்னசாமிக் கவுண்டரின் முதல் மனைவி சீதையம்மாளின் வாரிசுகள் என்றும், வாதி இரண்டாவது மனைவியின் மகன் என்றும், தாவா சொத்து சின்னசாமிக் கவுண்டருக்கு 17,05,1989 தேதியிட்ட 979/1989 எண் கொண்ட ஆவணப்படி ஏ ஷெட்யூல் சொத்துக்கள் பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்தார் என்றும், அவரது முதல் மனைவி சீதையம்மாளும், தாயாரும் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டனர் என்றும், கடந்த 13.06.2005 தேதியன்று வாதி, பிரதிவாதிகளைத் தனது வாரிசுகளாக விட்டு விட்டு சின்னசாமிக் கவுண்டர் இறந்துவிட்டார் என்றும், அவரின் இறப்பிற்குப் பின்னிட்டு வாதி, பிரதிவாதிகள் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளனர் என்றும், பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தி 3 ஆம் நபர்களுக்கு வில்லங்கப்படுத்த முயற்சிப்பதாகவும், சுமுகமாக பாகப்பிரிவினை கோரியும் பிரதிவாதிகள் செவி சாய்க்காததால் வேறு வழியின்றி பாகப்பிரிவினை கோரி வாதி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

**5.3.** மேலும் வா.சா.ஆ.1 பாக ஆவணத்தைப் பரிசீலிக்கையில் தாவா சொத்துக்கள் இறந்துபோன சின்னச்சாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது தெளிவாகிறது. வா.சா.ஆ.2 இறப்புச் சான்றிதழைப் பரிசீலிக்கையில் கடந்த 13.06.205 அன்று சின்னச்சாமிக் கவுண்டர் இறந்துவிட்டார் என்பது தெளிவாகிறது. பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் வழக்கை எதிர்வழக்காட முன்வராமல் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டனர். வா.சா.2 ஆன ஒரு லிங்கசாமிக் கவுண்டரின் சாட்சியமும் வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்தே அமைந்துள்ளது. வா.சா.1, 2 ன் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலமாக வாதி பிராது சங்கதிகளை நிரூபித்துள்ளார்.

**5.4.** வழக்குச் சொத்து சின்னசாமிக் கவுண்டருக்குப் பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது. எனவே தாவா சொத்தில் வாதிக்கு 1/4 பாகப் பங்குரிமை

கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இறுதி முடிவு**

இறுதியாக வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தில் வாதிக்கு 1/4 பாகம் கிடைக்கக்கூடியது எனவும், இந்த பாகத்தை இரண்டு மாத காலத்திற்குள் நலந்திகடு கண்டு பிரிவினை செய்து தனி சுவாதீனம் கொடுக்குமாறுப் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டுச் செலவு தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் நேரடியாகச் சொல்லப்பட்டுத் தட்டச்சரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டபின் 2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/– S.சந்தானகிருஷ்ணசாமி
**சார்பு நீதிபதி**
**பல்லடம்**

**வாதி தரப்புச் சான்றாளர்கள்**

வா.சா–01 திரு.துரைசாமி(வாதி)

வா.சா–02 திரு.லிங்கசாமி(3 ஆம் நபர்)

**வாதி தரப்புச் சான்றாவணங்கள்**

| வ.எண். | தேதி | விபரம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.05.1989 | சின்னசாமிக் கவுண்டர் பெயரில் உள்ள பாக ஆவணம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 13.06.2005 | சின்னசாமிக் கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் | சான்று நகல் |

**பிரதிவாதிகள் தரப்புச் சான்றாளர்கள் – சான்றாவணங்கள் – இல்லை**

ஒப்பம்/– S.சந்தானகிருஷ்ணசாமி
**சார்பு நீதிபதி**
**பல்லடம்**